# கடவுள் கண்டிப்புள்ளவரா?

**P.V. JESUDAS**

தேவனுடைய கிருபையும், இறக்கமும், சமாதானமும், உங்களோடு இன்றும் என்றும் எப்பொழுதும் இருப்பதாக!

ஒரு போர் கப்பலில் நூற்றுக்கணக்கான மக்கள் பிரயாணம் செய்துக் கொண்டிருந்தார்கள். அந்த கப்பலில், சுற்றி இருக்கும் பீரங்கிகள், சுற்றி இருக்கும் இடமெல்லாம் சுடும். அந்த பீரங்கியின் பக்கத்திலே வெடி மருந்தை வைத்திருந்தார்கள். அந்த வெடி மருந்தின் பக்கத்திலே யாரும் போகக்கூடாது என்று உத்தரவு போட்டு காவல் பண்ணி வைத்திருந்தார்கள். அங்கே ஒரு பலகையில் யாரும் சிகரெட் பிடிக்கக்கூடாது என்றும் எழுதிவைத்திருந்தார்கள்.

அங்கே ஒரு உபத்தலைவன் வாலிபனாக இருந்தான். அவன் சாயங்காலநேரத்திலே அந்த இடம் பக்கமாக உலாவிக் கொண்டிருந்தான். அவன் அநேக காரியங்களை குறித்து யோசித்துகொண்டே, தன்னை அறியாமல் அவன் பிடித்த சிகரெட்டை தூக்கி அந்த இடத்திலே போட்டுவிட்டான். அந்த சிகரெட் மருந்திலே விழுந்துவிட்டது. உடனே நெருப்பு பற்றிக்கொண்டு பயங்கர ஆபத்தை விளைவித்தது. அந்த கப்பலின் அநேக பகுதிகள் சேதமாயிற்று.

சுட்டுக்கொண்டேயிருக்கும் அந்த பீரங்கிற்கு ஒரு விசை இருக்கிறது. அதை நன்றாக பிடித்து இழுத்துவிட்டால், சுடுவது நின்று விடும். ஆனால், அதை பிடித்து இழுப்பது யார் என்ற கேள்வியும் அங்கே இருந்தது. எல்லோரும் பயத்தோடு என்ன செய்வது என்று புரியாமல் விழித்து கொண்டிருந்தார்கள். அந்த உபத்தலைவனோ, தான் செய்த குற்றத்தை எண்ணி மிகவும்



வருத்தப்பட்டு, கடைசியாக ஒரு தீர்மானத்திற்கு வந்தான். மேலே சுட்டு கொண்டிருந்த பீரங்கி தாழ்வாக வர ஆரம்பித்தது. அந்த நேரத்தை பயன்படுத்தி கொண்டு, தன்னுடைய உயிரை பாராமல், வேகமாக ஓடி அந்த விசையை பிடித்து இழுத்தான். உடனே அந்த பீரங்கி சுடுவதை நிறுத்திவிட்டது. ஆகவே அந்த கப்பலின் கேப்டன், அந்த கப்பலின் மேல் தளத்திற்கு அவனை கொண்டு வந்து நிறுத்தி, கப்பல் மாலுமிகள் யாவரும் அவனுக்கு மரியாதை செலுத்தினார்கள். இப்படிப்பட்ட வீர சாகசம் வேறு யாரும் செய்ததில்லை, தன்னுடைய உயிரை பாராமல், இத்தனை பேரின் உயிரையும் காப்பாற்றிவிட்டான். இது ஒரு பெரிய வீர செயல் என்று அவனுக்கு மிகவும் மேன்மையான பதக்கத்தை அந்த கேப்டன் அவனுக்கு மரியாதை செலுத்தி, அந்த பதக்கத்தை அவன் ஆடையில் பதித்தான்.

அப்பொழுது யாவரும் கைதட்டி ஆர்ப்பரித்தார்கள். திரும்பவும் கேப்டன்: இந்த வீரனை நான் பாராட்டுகிறேன், அதனால்தான் இவ்வளவு மரியாதை செய்தோம். ஆனாலும் நான் இந்த கப்பல் தலைவனாக இருக்கிறபடியினாலே, நான் செய்ய வேண்டிய இன்னொரு காரியம் ஒன்று உண்டு. இந்த பகுதியிலே யாரும் வரக்கூடாது, சிகரெட் பிடிக்கக்கூடாது என்னு திட்டவட்டமான கட்டளை இந்த உபத்தலைவனுக்கு தெரியும். ஆகவே இவன் அந்த கட்டளையை மீறி, அந்த சிகரெட்டை அந்த இடத்திலே போட்டதினாலே, இவ்வளவு ஆபத்துகளும் பலமான சேதங்களும் வந்தது. ஆகவே, இப்படி அசட்டையாகவும் அநேக நஷ்டத்திற்கு காரணமாக இருந்த இந்த உபத்தலைவனுக்கு மரணத்தண்டனை கொடுக்கிறேன் என்று அந்த கேப்டன் சொன்னார்.

சற்று முன்னதாக மரியாதை செலுத்தின அந்த போர் வீரர்கள், அவனுடைய உடையை கழற்றிவிட்டு அவனுடைய கை கால்களை கட்டி, அந்த கப்பலின் ஓரத்திலே கொண்டு நிறுத்தி, அங்கு பத்து பேர் துப்பாக்கிகளை எடுத்து அவனை சுட்டார்கள். அவன் அப்படியே கடலுக்குள்ளாக விழுந்துபோனான். இது கதையல்ல, உண்மையாய் நடந்து, சரித்திரத்திலே எழுதப்பட்டவை.

இந்த சம்பவத்தை நான் வாசித்தபோது, பலவிதமான எண்ணங்கள் வந்தது. அவ்வளவு வீர செய்கையை செய்த அந்த உபத்தலைவனை காப்பாற்றி இருக்கலாம். ஏதோ விபத்து நடந்து விட்டது, அவன்தானே இந்த கப்பலை காப்பாற்றினான். அத்தனை

உயிரையும் காப்பாற்றினானே, அவனை உயிரோடே விட்டிருக்கக் கூடாதா? ஒருவேலை அவன் பதவியை பிடிங்கி, அவனை அந்த பதவியிலிருந்து எடுத்து அவனை வீட்டிற்கு அனுப்பிவிட்டிருக் கலாம் அல்லவா? என்று நான் யோசித்தேன்.

ஆண்டவர் அன்புள்ளவர், இந்த அண்டசராசரத்திலே அப்படிப்பட்ட அன்பை நாம் எங்கும் பார்க்கமுடியாது. நாஸ்தீக கூட்டத்தினர் கிறிஸ்துவின் காலத்திற்கு பிற்பாடு அப்போஸ்தல காலத்தில் இருந்தார்கள். அவர்கள் கிரேக்க மார்க்கத்தை சார்ந்தவர்கள். அவர்கள் கடைசியாக கிறிஸ்தவர்களானார்கள். இந்த நாஸ்தீக கூட்டத்தை சார்ந்தவர்கள்தான், ஆத்துமா இருக்காது அது சாகாது என்ற கொள்கையை கிறிஸ்தவ மார்க்கத்திலே புகுத்தினவர்கள். அதுமாத்திரமல்ல, இந்த மக்கள் சில தத்துவ ஞானத்தை கடைபிடித்தார்கள். அது, ஆண்டவர் அன்புள்ளவர்தான், அவர் மக்களை விட அதிக உயரத்திலே இருக்கிறார், மக்களை போல அவரை நினைக்கக்கூடாது. ஆகவே இந்த உலகத்தில் யாரையும் அவர் அழிக்கமாட்டார், தண்டனை கொடுக்க மாட்டார், அவர் அன்புள்ள ஒரு தெய்வம் என்ற கொள்கை அவர்களிடம் இருந்தது.

**நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்; கிருபையும் சத்தியமும் உமக்கு முன்பாக நடக்கும்.** – சங்கீதம் 89:14.

அவருடைய ராஜியத்திலே வெறும் அன்பு என்ற கொள்கை மட்டும்தான் இருக்கிறதா? அந்த அன்பை வைத்து ஆண்டவர் அண்டசராசரத்தை அரசாளமுடியுமா? அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம் நீதியும் நியாயமும்தானே. அவர் அன்புள்ளவர்தான் ஆனால் அவர் நீதியுள்ளவராயுமிருக்கிறார். அவர் ஒரு அன்பான பிதா, அதே நேரத்தில் அவர் நியாயாதிபதி என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும். அவர் அப்படி நியாயாதிபதியாக இல்லா விட்டால், இந்த அண்டசராசரத்தை ஆளமுடியாது. ஆகவே அன்பும் நீதியும் ஒன்று சேர்ந்து இருக்கிறது.

**அவர் கன்மலை; அவர் கிரியை உத்தமமானது; அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன்; அவர் நீதியும் செம்மையுமானவர். –உபா.32:4.**

பிரம்பை கையாடாதவன் தன் மகனை பகைக்கிறான் என்று வேதம் சொல்லுகிறது. எனக்கு மூன்று பிள்ளைகள் உண்டு. அந்த மூன்று பிள்ளைகளை நான் திட்டி வளர்த்தமாதிரி எனக்கு ஞாபகமில்லை. அந்த பிள்ளைகளை நான் ஒரு நாளும் அடித்ததில்லை. என் மனைவி திட்டி அடிப்பார்கள். ஆனாலும்



அந்த பிள்ளைகளுக்காக நான் தினமும் அவர்களுக்காக அதிக திகமாய் ஜெபித்துவந்தேன். அந்த பிள்ளைகளுக்கு வேதம் வாசிக்க கற்றுக்கொடுத்தேன். அவர்களுக்கு ஜெபம் செய்ய கற்றுக் கொடுத்தேன். ஆலயத்திற்கு ஒழுங்காக போக கற்றுக்கொடுத்தேன். ஆகவே ஆண்டவருடைய கிருபையினாலே அந்த மூன்று பிள்ளைகளும், நல்ல குணசாலியான பிள்ளைகளாக வளர்ந்தார்கள். அதற்காக அவருடைய நாமத்தை நான் ஸ்தோத்தரிக்கிறேன்.

அன்பை வைத்து ஒரு குடும்பத்தை நாம் நடத்த முடியுமா? அன்போடு நியாயமும் நீதியும் சேர்த்து நடத்தப்படவேண்டும். பாவம் இந்த உலகத்திற்கு வந்ததனாலே, நீதியும் நியாயத்தையும் அதிகமாக நிலைநாட்ட வேண்டிய நிலமை இந்த உலகத்திலே இருக்கிறது. அன்பை பற்றி ஆண்டவர் எவ்வளவு பேசுகிறாரோ, அந்த அளவிற்கு நீதி நியாயத்தை பற்றியும் பேசுகிறார். பத்து கற்பனைகளை கைக்கொள்ளவேண்டும் என்று பேசுகிறார். அந்த கற்பனைகளை கைக்கொள்ளாவிட்டால் நாம் தண்டிக்கப்படுவோம் என்ற பேசுகிறார். இந்த உலகத்தை சட்டங்கள் ஆளுகிறது, அந்த சட்டத்தின் மூலமாக அரசன் இந்த உலகத்தை ஆளுகிறான்.

## கடவுள் கண்டிப்புள்ளவரா?

ஒரு சமயத்தில் ஒரு வாலிபனை நீதிமன்றத்திலே தண்டித்தார்கள். அந்த வாலிபன் ஒரு தப்பு செய்துவிட்டான். ஆகவே அந்த நியாயாதிபதி அந்த வழக்கை விசாரித்து, அந்த வாலிபன் 300 ரூபாய் அபராதம் கட்டவேண்டும் என்று கட்டளையிட்டார். அவன் ஒரு ஏழை வாலிபன். அவன் அந்த நியாயாதிபதி யினிடத்தில்: ஐயா நான் செய்தது தப்புதான். நான் தெரியாமல் தப்பு செய்துவிட்டேன், என்னை நீர் மன்னித்துவிடவேண்டும், நான் இனிமேல் அப்படிப்பட்ட காரியங்களை செய்யமாட்டேன், நான் ஒரு ஏழை, என்னிடத்தில் பணமில்லை, எப்படி 300 ரூபாயை கட்டமுடியும்? என்று அழுதான். அந்த நியாயாதிபதி அந்த தண்டனையை கூறிவிட்டு, அவர் தலையில் போட்டிருந்த தொப்பியை எடுத்து, அதிலே சில பணத்தை எடுத்து போட்டார். அந்த தொப்பியை நீதிமன்றத்திலே இருந்த யாவரிடமும் கொடுத்தார்கள். ஒவ்வொருவரும் தன் பங்கிற்கு பணம் போட்டார்கள். அப்பொழுது அந்த பணத்திலே நீ 300 ரூபாயை எடுத்து உன்னுடைய அபராதத்தை கட்டிவிட்டு, மற்றதை உன்னுடைய செலவுக்கு வைத்து கொள் என்று சொன்னார்.

இந்த கதையில் நாம் கற்றுக்கொள்ளவேண்டியது என்னவென்றால், கர்த்தருடைய பிள்ளைகள் விசேஷமாக இந்த நாட்களிலே அறிந்துகொள்ளவேண்டியது, ஆண்டவர் நீதியுள்ளவர் அவர் நியாயக்கேடு இல்லாதவர் என்று திருமறையிலே சொல்லுகிறது. ஒருவேலை ஆண்டவர் மிகுந்த அன்புள்ளவர், அவர் இந்தவிதமாக தண்டிக்கமாட்டார் என்று சொன்னால் அது சரியல்ல. இன்றைக்கு சூரியன் நமக்கு வெளிச்சத்தை கொடுக்கிறது, சந்திரன் நமக்கு வெளிச்சத்தை தருகிறது, மழை நமக்கு பெய்கிறது, மரங்கள் கனிகளை கொடுக்கிறது. இவையெல்லாவற்றையும் பார்க்கும்போது உண்மையாகவே ஆண்டவருடைய அன்பு வெளிப்படுகிறது. நாம் வாழவேண்டும், நன்றாக இருக்கவேண்டும் என்று ஆண்டவர் எவ்வளவோ காரியங்களை நமக்கு செய்கிறார். ஆனாலும் இன்றைக்கு துன்பங்கள் இருக்கிறது, மரணம் இருக்கிறது, கண்ணீர் இருக்கிறது, இவைகள் யாவும் ஆண்டவருடைய நியாயத்தையும் நமக்கு சொல்லுகின்றன.

இயேசு ஏன் கல்வாரி சிலுவையிலே மரித்தார்? அவர் ஆண்டவர் அல்லவா? ஒரே பேரான குமாரன் அல்லவா? அவர் எதற்காக கல்வாரி சிலுவையிலே மரிக்கவேண்டும்? ஏனென்றால் அது சட்டம். பாவம் செய்தவர்கள் மரிக்கவேண்டும். இயேசு கிறிஸ்து பாவம் செய்யவில்லை, ஆனால் நம்முடைய பாவங்களை அவர் ஏற்றுக்கொண்டார்.

**நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். –** 2 கொரிந்தியர் 5:21

இயேசு கிறிஸ்துவானவர் இந்த உலகத்திலே இருந்தபோது, பாவமே செய்யவில்லை. ஆனால், நம்முடைய பாவங்களை அவர் ஏற்றுக்கொண்டபோது, அவர் பாவியானார். அந்த பாவத்திற்கு தண்டனையாக அவர் மரிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஏனென்றால் பாவத்தின் சம்பளம் மரணம்! கல்வாரி சிலுவை நமக்கு என்ன சொல்லுகிறது? நம்மை இரட்சிப்பதற்கு ஆண்டவர் எவ்வளவு அன்போடுகூட தன்னுடைய சொந்த குமாரனையே இந்த உலகத்திற்கு அனுப்பிவைத்தார். அந்த ஆண்டவரின் அன்பின் அகலம் ஆழம் உயரத்தை நாம் கொஞ்சமேனும் கண்டுபிடிக்க இயலாது.

பரலோகத்தை நமக்காக அவர் வெறுமையாக்கினார். அங்கிருக்கும் தேவதூதர்கள் அத்தனைபேரும் நமக்கு ஊழியம் செய்ய அனுப்பிவிட்டார். எவ்வளவு பெரிதான அன்பு!



அன்பும் நீதியும் கல்வாரி சிலுவையிலே ஒன்றையொன்று சந்தித்தது.

மத்தேயு 5,6,7 ஆம் அதிகாரத்திலே மலை பிரசங்கத்தை குறித்து பேசுகிறது. அந்த பிரசங்கத்திலே நாம் அறிந்து கொள்ளக் கூடாத விசேஷமான காரியங்களை குறித்து பேசினார். அவர் பேசி எப்படி முடித்தார் என்றால்,

**அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன். –** மத். 7:22,23.

இங்கே விசித்திரமான ஒரு காரியத்தை நாம் பார்க்கிறோம். ஒரு பெரிய கூட்டத்தாரை நோக்கி ஆண்டவர்: அக்கிரமச் செய்கைக் காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று சொல்லுகிறார். நியாயத்தீர்ப்பு நாளிலே இந்த காரியம் நடக்கபோகிறது. ஏராளமான மக்களை பார்த்து உங்களை நான் அறியேன் என்று சொல்லுவார்.

அப்பொழுது அவர்களுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி இருக்கும். ஏன் இப்படி சொல்லுகிறார்? அவரிடத்திலே எவ்வளவோ ஜெபம் செய்தோம், எவ்வளவோ உபவாசம் செய்தோம்? ஆண்டவரே ஆண்டவரே என்று விடாமல் கூப்பிட்டோம், அவர் எங்களை எவ்வளவு அதிசயமாக நடத்தினார், எங்களுக்கு ஒத்தாசை செய்திருக்கிறார், எங்களுக்கு உதவி செய்திருக்கிறார், எங்களை தாங்கியிருக்கிறார், குணமாக்கும் வரத்தை அவர் கொடுத்தாரே, பிசாசுகளை துரத்தும் வரத்தை கொடுத்தாரே, நாங்கள் அந்த வரங்களையெல்லாம் ஆண்டவருடைய கிருபையினாலே பெற்றுக்கொண்டோமே என்று சொல்லுவார்கள். அப்படிப்பட்டவர்களை ஆண்டவர் பார்த்து உங்களை நான் அறியேன் என்று சொல்லுவார். அதற்கு அவர்கள் எப்படி நீர் எங்களை இப்படி சொல்லுகிறீர்? என்று கேட்கும்போது, ஆண்டவர் அதற்கு மறு உத்தரவாக,

**பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. –** மத்தேயு 7:21.

ஆண்டவர் நியாயாதிபதியாக உட்காரும் நாளிலே, அவருடைய சட்டம் மட்டும்தான் பேசும். அவருடைய கட்டளையின்படி நடந்தாயா? நான் சொன்ன வசனங்களின்படி நீ

நடந்தாயா? என்ற ஒரே கேள்விதான் கேட்பார். அப்பொழுது, ஆண்டவரே உம்மிடம் கேட்டதெல்லாம் நான் பெற்றுக் கொண்டேனே, உம்முடைய நாமத்தினாலேயே பிசாசுகளை துரத்தினோமே என்று சொல்லும்போது, ஆண்டவர் அதற்கு உங்களை நான் அறியேன் என்று சொல்லிவிடுவார். நியாயத்தீர்ப்பு நாளிலே ஏராளமான பேர்கள் மிகவும் அதிர்ச்சியடையபோகிறார்கள். என்னை ஆண்டவர் நடத்துகிறார் என்று சொல்லி கொள்கிறவர் களுக்கு ஆண்டவர் நீ என் பிதாவின் சித்தத்தின்படி செய்தாயா? என்ற ஒரு கேள்வியைதான் கேட்பார்.

ஆதாமிடம் ஆண்டவர், நீ எல்லா கனிகளையும் புசிக்கலாம், ஆனால் நன்மை தீமை அறியத்தக்க அந்த ஒரே மரத்தின் கனியை மட்டும் புசிக்கக்கூடாது என்றார். இது அவருடைய கட்டளையாகும். எவ்வளவு அன்பாக அவர்களை நேசித்தார். வாரத்திற்கு ஒரு முறை அவர்களை பார்க்க வந்தார். தேவ துாதர்களை அனுப்பினார். தேவதுாதர்கள் அவர்களுக்கு ஒத்தாசையாக இருந்தார்கள். அந்த வாழ்க்கையிலே எந்த குறையும் இல்லை. ஒரே மகிழ்ச்சி, ஒரே சந்தோஷம். மரணமில்லை, துன்பமில்லை, துக்கமில்லை, கண்ணீரில்லை, வியாதியில்லை எந்த துன்பத்தை கொடுக்க காரியமும் அங்கிருந்ததில்லை. அப்படிப்பட்ட அந்த உலகத்தில், ஆண்டவர் இந்த சிறு கட்டளையை கொடுத்தார். இது கஷ்டமான கட்டளையுமல்ல. அந்த மரத்தின் கனியை நீ புசிக்காதே என்ற ஒரே கட்டளைதான். அப்படியும் ஏவாள் சர்பத்தினுடைய பேச்சை கேட்டு, அந்த பழத்தை பறித்து சாப்பிட்டாள்.

இன்றைக்கு நம்முடைய பிள்ளைகள் ஏதாவது தவறு செய்துவிட்டாள், சிறிதாக தண்டித்து விட்டு விடுகிறோம். ஏன் தவறு செய்தாய் என்று கொன்றுபோடுவதில்லை. இப்படியிருக்க அதிக அன்புள்ள ஆண்டவர், அன்பின் ஆழமும் ஊற்றுமானவர், இந்த ஏவாள் அந்த பழத்தை புசித்தபோது, அந்த ஏதேன் தோட்டத்தை விட்டு விரட்டினார். நீ இந்த உலகத்தின் இனி பாடுபட்டு நெற்றி வியர்வை நிலத்தில் விழ, பாடுபட்டு சாப்பிடுவாய் என்று சொன்னார். உனக்கு இந்த உலகம் முள்ளையும் குறுக்கையும் முளைப்பிக்கும் என்று சொன்னார்.

அவர்களுக்கு ஆண்டவர் கொடுத்திருந்த அந்த வெளிச்சத்தின் ஆடையை எடுத்துவிட்டார். அவர்கள் தாங்கள் நிர்வாணமானதை கண்டு தோள் உடைகளை உடுத்திக்



கொண்டார்கள். ஒரு சிறு தவறுதான் செய்தார்கள். பழத்தை புசிக்கவேண்டாம் என்று சொன்னார், அதை புசித்து விட்டார்கள். இதற்கு இவ்வளவு பெரிய தண்டனையா என்று நாம் கேட்கலாம். ஆனால், அவருக்கு கீழ்ப்படிகிறோமா இல்லையா என்ற கேள்விதான் அங்கே இருந்தது. சாப்பிடாதே என்று சொன்னார், அந்த கட்டளைக்கு கீழ்படிவதைவிட்டு சாப்பிட்டார்கள். கீழ்ப்படியாமையினாலே இந்த உலகம் முழுவதும் சாபம் வாங்கினது.

அவர் நம்மை அதிகமாக நேசிக்கிறார். எவ்வளவோ பாவங்கள் நாம் இந்த உலகத்தில் செய்துகொண்டுதான் இருக்கிறோம். அந்த பாவங்களுக்கு தண்டனை கொடுத்தார் என்றால் நாம் மரித்தேபோயிருப்போம். இன்றைக்கு மன்னித்து கொண்டேயிருக்கிறார். மனிதனுக்கு பத்து பிரமானங்களை எழுதி கொடுத்தார். நிறைய வசனங்களை எழுதி கொடுத்தார். பரலோகத்திலே எப்படி இருக்கவேண்டும் என்று இந்த உலகத்திலேயே நாம் வாழ்ந்துகாட்டவேண்டும். பரலோகத்தினுடைய நாகரீகத்தை இங்கேயே நாம் கற்றுக்கொள்ளவேண்டும். இங்கேயே நம்மை அவர் ஆயத்தப்படுத்துகிறார். பரலோகத்திலே போய் நாம் பொய் சொல்ல முடியாது. பரலோகத்தில் போய் நாம் எந்த பாவமும் செய்ய முடியாது. ஆகவே பரலோக வாழ்க்கையை இங்கே நாம் வாழ்ந்தாக வேண்டும். அதற்கு உதவியாக இருப்பது, அவர் கொடுத்த பத்து கட்டளைகள், வேறு ஒன்றுமில்லை.

ஆகவே இந்த உலகத்தில் நாம் கற்றுக்கொள்ளதான் நம்மை அவர் வழி நடத்துகிறார். நாம் கற்றுகொள்ளாவிட்டால், நம்மை தண்டித்து சீர்த்திருத்தம் செய்கிறார். எப்படியோ அவருடைய வழியிலே நடக்கவேண்டும். என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜியத்திலே பிரவேசிப்பானேயன்றி, கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிக்கமாட்டான் என்று வேதம் நமக்கு சொல்லுகிறது.

இந்த உலகத்தில் எல்லா மனிதனுக்கும் தேவன் சில நிறந்தர கட்டளைகளை போட்டிருக்கிறார். இதைதான் சாப்பிடவேண்டும். இதைதான் உடுத்தவேண்டும், இதைதான் பேச வேண்டும் என்றெல்லாம் சட்டங்களை போட்டிருக்கிறார். உதாரணமாக மீன்களில் சிறகும் செதிலும் இருக்கவேண்டும், அப்படியில்லாத மீன்கள் யாவும் உங்களுக்கு அசுத்தமாக இருப்பதாக என்று சொன்னார். ஆகவே மெடிக்கல் யுனிவர்சிட்டி

படிக்கிறவர்கள் ஒரு ஆராய்ச்சி செய்தார்கள். சிறகு, செதில் இல்லாத மீன்களை பரிசோதித்து பார்த்தபோது, அவைகள் மலத்தை சாப்பிடுகிறவைகளாக இருப்பதாக சொன்னார்கள். அசுசியை சாப்பிடுகிற அசுத்தமான மீன்கள் என்று சொன்னார்கள். இதற்காகதான் ஆண்டவர் அப்படிப்பட்ட மீன்களை சாப்பிடாதீர்கள் என்று சொன்னார். ஆகவே மிருகங்களைகூட இப்படிதான், இப்படிப்பட்ட மிருகங்களைதான் நாம் புசிக்கவேண்டும் என்று சொன்னார். அந்த சொல்லாத மிருகங்கள் அசுத்தமானவைகள் என்று சொல்லுகிறார்.

அதேபோல அவரை தொழுதுகொள்ளவும் ஒரு முறை இருக்கிறது என்று சொல்லுகிறார்.

**உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை ஏன் மீறி நடக்கிறார்கள்? கைகழுவாமல் போஜனம் பண்ணுகிறார்களே! என்றார்கள். –**மத்தேயு 15:2.

ஆண்டவருடைய சட்டம் ஒரு புறம் இருக்கிறது, பாரம்பரியம் ஒரு புறம் இருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகள் பாரம்பரியத்தை கைக்கொள்ளுவதா? அல்லது ஆண்டவருடைய சட்டத்தை கைக்கொள்ளுவதா? இதுதான் இன்றைக்கு கிறிஸ்தவர்களின் பிரச்சனையாக இருக்கிறது.

**அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்? –**மத்தேயு 15:3.

நம்முடைய பாரம்பரியத்தினாலே ஆண்டவருடைய கற்பனைகளை மீறி நடக்கலாமா?

**உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்றும்; தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்படவேண்டும் என்றும், தேவன் கற்பித்திருக்கிறாரே. நீங்களோ, எவனாகிலும் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி, தன் தகப்பனையாவது தாயையாவது கனம்பண்ணாமற்போனாலும், அவன் கடமை தீர்ந்ததென்று போதித்து, உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கிவருகிறீர்கள். மாயக்காரரே, உங்களைக்குறித்து: இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப்போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார். –**மத்தேயு 15:4–9.

மனுஷனுடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு, பாரம் பரியங்களை நாம் கைக்கொண்டு நாம் ஆண்டவரை ஆராதனை செய்யும்போது, அவருடைய கற்பனைகளை அவமாக்குகிறோம் என்று கர்த்தர் சொல்லுகிறார்.



மனிதனுடைய ஆசரிப்பு ஞாயிற்று கிழமையாகவும், ஆண்டவருடைய சட்டம் சனிக்கிழமையாகவும் இருக்கிறது. உண்மையான ஓய்வு நாள் சனிக்கிழமைதான், ஆனால் மனிதனோ இல்லை ஞாயிறுதான் என்று சொல்லி கொள்ளுகிறான். கடவுளோடு சேர்ந்து ஆகாரம் புசித்துகொண்டு சாத்தானோடு நடனமாட முடியுமா? மனுஷனுடைய கற்பனைகளை வைத்து, பாரம்பரியங்களை வைத்து, ஆண்டவரை நாம் ஆராதிக்க முடியாது. அது வீணான ஆராதனை என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

**அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. –** ரோமர் 12:1.

வேதத்திலே மூன்று ஆராதனைகளை பற்றி பேசுகிறார். முதலாவது ஆண்டவருக்கு ஏற்றதொரு ஆராதனை, அடுத்து வீணான ஆராதனை, அடுத்து புத்தியுள்ள ஆராதனை. புத்தியுள்ள ஆராதனை என்றால், நம்முடைய உடம்பு தேவனுடைய ஆலயம், அந்த தேவனுடைய ஆலயத்தை நாம் கெடுக்கக்கூடாது. நமக்கு இஷ்டமானதையெல்லாம் சாப்பிட்டு, அந்த தேவனுடைய ஆலயத்தை கெடுக்கக்கூடாது. மது, காப்பி, டீ போன்ற காரியங்கள் உடம்பை கெடுக்கிறது. அவைகளை நாம் அருந்திவிட்டு, நாம் ஆண்டவருக்கு ஆராதனை செய்வது சரியல்ல. ஆகவே நம்முடைய உடம்பை அவருடைய ஆலயமாக பாதுகாத்து, பிறகு நாம் ஆராதனை செய்தால், அதுதான் புத்தியுள்ள ஆராதனை என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

இன்றைக்கு நாம் எந்த ஆராதனை செய்கிறோம்? நம்முடைய ஊழியமானது கடவுளுக்கு ஏற்றப்படி இருக்கிறதா? அவரால் அங்கீகரிக்கப்பட்ட ஆராதனையாக இருக்கிறதா?

**புறஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளாதிருங்கள்; வானத்தின் அடையாளங்களாலே புறஜாதிகள் கலங்குகிறார்களே என்று சொல்லி, நீங்கள் அவைகளாலே கலங்காதிருங்கள். ஜனங்களின் வழிபாடுகள் வீணாயிருக்கிறது; காட்டில் ஒரு மரத்தை வெட்டுகிறார்கள்; அது தச்சன் கையாடுகிற வாச்சியால் பணிப்படும். வெள்ளியினாலும் பொன்னினாலும் அதை அலங்கரித்து, அது அசையாதபடிக்கு அதை ஆணிகளாலும் சுத்திகளாலும் உறுதியாக்குகிறார்கள். அவைகள் பனையைப்போல நெட்டையாய் நிற்கிறது, அவைகள் பேசமாட்டாதவைகள், அவைகள் நடக்கமாட்டாததினால் சுமக்கப்படவேண்டும்; அவைகளுக்குப் பயப்படவேண்டாம்; அவைகள் தீமைசெய்யக் கூடாது, நன்மைசெய்யவும் அவைகளுக்குச் சக்தி இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார். -**எரேமியா 10:2,3.

இன்னொரு வீணான ஆராதனை பற்றி ஆண்டவர் பேசும்போது, மனுஷருடைய கற்பனைகளை, சடங்காசாரங்களை நாம் கைக்கொண்டு ஆராதனை செய்வோமென்றால், அந்த ஆராதனையில் பிரயோஜனமில்லை பலனில்லை. அந்தவிதமான ஆராதனைகளை எவ்வளவுதான் பயபக்தியோடு செய்தாலும் அது தேவனால் அங்கீகரிக்கப்படாத ஆராதனை என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

காயீனும் ஆபேலும் பலியிட்டார்கள். காயீன் தன்னுடைய நிலத்தில் விழுந்த அருமையான கனிகளை எடுத்து வந்து ஆண்டவருக்கு கொடுக்கவேண்டும் என்று ஆசையோடு கொண்டு வந்து வைத்தான். ஆபேலும் தன்னுடைய மந்தையிலிருந்து ஒரு ஆட்டை பிடித்துகொண்டு வந்து வைத்தான். ஆனால் தேவனோ காயீனின் பலியை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால், மேசியா தேவ ஆட்டுக்குட்டியாக வருவார், வந்து இரத்தம் சிந்துவார். அந்த இரத்தத்தினாலே நமக்கு மீட்பு உண்டு. அவர் வந்து மரிப்பார் என்பதற்கு அடையாளமாக அந்த பலியிட்டு வந்தார்கள். அவர் மேல் விசுவாசம் வைப்பதற்கு, அவருடைய இரத்தத்தினால் நமக்கு இரட்சிப்பு கிடைக்கும் என்பதற்குதான் பலிமுறை இருந்தது.

அவரே முதல் பலியை செலுத்தினார் அந்த ஏதேன் தோட்டத்திலே. ஆகவே அவர் சொன்னபடி நாம் ஆராதனை செய்வதா? அல்லது நம்முடைய மனம்போன போக்கிலே ஆராதனை செய்வதா? காயீனுடைய எண்ணத்திலே தப்பில்லை. இதோ நான் பிரயாசப்பட்ட இந்த கனிகளை ஆண்டவருக்கு கொடுக்கிறேன் என்று செய்தான். ஆனால் ஆண்டவரோ இப்படிதான் தொழவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்.

**விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையானபலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சிபெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக்குறித்து தேவனே சாட்சிகொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்.** எபிரேயர் 11:4.

அவர் சொன்னபடி ஆபேல் ஆராதனை செய்தான். அவர் சொன்னதை விட்டு ஆராதனை செய்தோமென்றால், அந்த ஆராதனையிலே பிரயோஜனமில்லை. கோவிலுக்கு போவதும், பாட்டு பாடுவதும், காணிக்கைகளை கொடுப்பதிலும் பிரயோஜன மில்லை. உண்மையான ஆராதனையை ஆண்டவர் கேட்கிறார். பொய்யான ஆராதனை செய்துகொண்டு அவரிடம் பயபக்திபோல கட்டினாலும் பிரயோஜனமில்லை என்று ஆண்டவர் சொல்லுகிறார்.



உடன்படிக்கை பெட்டி ஒருவர் வீட்டிலே இருந்தது. ஆண்டவருடைய உடன்படிக்கை பெட்டி வீட்டிலே இருக்கலாமா? ஆகவே தாவீது அரசன், இஸ்ரவேலர் யாவரையும் கூப்பிட்டு, அவருக்கென்று ஆண்டவருடைய ஆலயமாக ஒரு கூடாரத்தை போட்டு, அந்த வீட்டிலிருந்த உடன்படிக்கை பெட்டியை எடுத்து கொண்டு, ஆடலோடும் பாடலோடும் துதியோடும் கொண்டு வந்து அந்த ஆசரிப்புகூடாரத்திலே வைக்கவேண்டும் என்று சொல்லி தாவீது யாவரையும் அழைத்து சந்தோஷமாக, ஒரு புதிய வண்டியிலே அந்த உடன்படிக்கை பெட்டியை கொண்டுவந்து கொண்டிருந்தான்.

**கேருபீன்களின் நடுவே வாசமாயிருக்கிற சேனைகளுடைய கர்த்தரின் நாமம் தொழுது கொள்ளப்படுகிற தேவனுடைய பெட்டியைப் பாலையூதாவிலிருந்து கொண்டுவரும்படி, அவனும் அவனோடிருந்த அந்த ஸ்தலத்தாரும் எழுந்துபோய், தேவனுடைய பெட்டியை ஒரு புதுஇரதத்தின்மேல் ஏற்றி, அதைக் கிபியாவிலிருக்கிற அபினதாபின் வீட்டிலிருந்து கொண்டுவந்தார்கள்; அபினதாபின் குமாரராகிய ஊசாவும் அகியோவும் அந்தப் புது இரதத்தை நடத்தினார்கள். அவர்கள் தேவனுடைய பெட்டியை ஏற்றி, அதைக் கிபியாவிலிருக்கிற அபினதாபின் வீட்டிலிருந்து நடத்திக்கொண்டு வருகிறபோது, அகியோ பெட்டிக்கு முன்னாலே நடந்தான். தாவீதும் இஸ்ரவேல் சந்ததியார் அனைவரும் தேவதாரு மரத்தால் பண்ணப்பட்ட சகலவித கீதவாத்தியங்களோடும், சுரமண்டலம் தம்புரு மேளம் வீணை கைத்தாளம் ஆகிய இவைகளோடும், கர்த்தருக்கு முன்பாக ஆடிப்பாடிக்கொண்டுபோனார்கள். அவர்கள் நாகோனின் களம் இருக்கிற இடத்துக்கு வந்தபோது, மாடுகள் மிரண்டு பெட்டியை அசைத்தபடியினால், ஊசா தேவனுடைய பெட்டியினிடமாய்த் தன் கையை நீட்டி, அதைப் பிடித்தான். அப்பொழுது கர்த்தருக்கு ஊசாவின்மேல் கோபமூண்டது; அவனுடைய துணிவினிமித்தம் தேவன் அங்கே அவனை அடித்தார்; அவன் அங்கே தேவனுடைய பெட்டியண்டையில் செத்தான்.**
**– 2 சாமுவேல் 6:2–7.**

பெட்டி வந்துகொண்டிருந்தபோது, திடிரென்று அந்த மாடுகள் மிரண்டன. அந்த பெட்டி கீழே விழுவதுபோல இருந்தது. ஆண்டவருடைய பெட்டி கீழே விழுந்து விடுமோ என்று சொல்லி, அந்த பெட்டியை தன்னுடைய கையினாலே ஊசா தொட்டான். இது நல்ல எண்ணந்தானே? ஆண்டவருடைய பெட்டி கீழே விழக்கூடாது. விழுந்துவிட்டால் என்ன செய்வது என்று சொல்லி அந்த பெட்டியை விழாதபடி கைகளை கொண்டு போய் தடுத்தான். உடனே ஆண்டவர் அங்கே அவனை அழித்தார். அவனுடைய துனிவினிமித்தம் அவன் இறந்துபோனான். மூன்று விதமான ஆசாரியரின் ஆட்கள் அங்கிருந்தார்கள். கேராவின் புத்திரர் மூன்று பேர். அதிலே ஒரு சாரார், அந்த உடன்படிக்கை பெட்டி, அந்த மகா பரிசுத்த ஸ்தலத்திலே இருக்கிற யாவையும்

கொண்டுபோகும்போது, அவர்கள்தான் அதை தொடவேண்டும். வேறு எந்த ஆசாரியரும் அதை தொடக்கூடாது என்று ஆண்டவர் கட்டளையிட்டிருந்தார். ஊசா அந்த வம்சத்தின் ஆசாரியன் அல்ல, தேவாலயத்தில் பணிவிடை செய்கிறவன் அல்ல, வீட்டிலே ஆசாரியனாக இருந்தான். ஆசாரியர்களிலே முக்கால் பாகம் பேர் அதை தொடக்கூடாது. அந்த கட்டளையை அவன் மீறினான். நல்ல எண்ணம் கடவுளின் கற்பனைக்கு விரோதமாக இருக்கும்போது ஆண்டவர் அதை அங்கீகரிப்பதில்லை. அந்த ஆராதனை வீணானது என்று தேவன் சொல்லுகிறார்.

ஆண்டவர் போட்ட சட்டத்தையும், அவர் சொன்ன வசனங்களின்படி நடக்கவேண்டும் என்பதில் கடவுள் கண்டிப்பாகதான் இருக்கிறார். ஏன் அந்த கண்டிப்பு? இந்த சட்டங்களில் நாம் சரியாக கடைபிடிக்காமல் இருந்து பரலோகத்திற்கு நாம் போவோமானால், அந்த பரலோக ராஜ்யத்தில் பாவம் வந்துவிடும். இந்த ஒரு பாவ உலகம், பாவ வாழ்க்கை போதும். இனிமேல் இந்த அண்டசராசரித்திலே ஆண்டவர் பாவத்தை விடவேமாட்டார். ஆகவே நாம் தேவனுடைய ராஜியத்திற்கு போகவேண்டுமென்றால், கற்பனைகளின் மீறல் இருக்கக்கூடாது என்று ஆண்டவர் விரும்புகிறார். அவர் மிகவும் கண்டிப்புள்ளவராக இருக்கிறார். எந்த பாவமும் பரலோகத்திற்கு போகக்கூடாது. இறைவனுடைய சட்டத்தை மீறுவதே பாவமாகும்.

லோத்துவின் மனைவியினிடத்தில் ஆண்டவர் பின்னிட்டு பாராமல் ஓடு என்று கட்டளையிட்டார். அவளோ அவருக்கு கீழ்ப்படியாமல் பின்னிட்டு பார்த்து உப்புதூளானாள். லோத்து குடும்பம் அழியக்கூடாது என்று ஆண்டவர் நினைத்து, அவர்களை காப்பாற்றினார். ஆனால் அங்கே ஒரு கட்டளையும் இட்டார். அந்த கட்டளையை அவள் மீறினாள். அதற்கு வேண்டிய தண்டனை உடனே கிடைத்தது.

**அவன் தாமதித்துக்கொண்டிருக்கும்போது கர்த்தர் அவன்மேல் வைத்த இரக்கத்தினாலே, அந்தப் புருஷர் அவன் கையையும், அவன் மனைவியின் கையையும், அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து, அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டார்கள். அவர்களை வெளியே கொண்டுபோய் விட்டபின்பு, அவர்: உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே; இந்தச் சமபூமியில் எங்கும் நிற்காதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார். – ஆதி. 19:16,17.**

**அவன் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து, உப்புத்தூண் ஆனாள். – ஆதி. 19:26.**

தேவனுடைய கட்டளைகளை நாம் பயத்தோடும் நடுக்கத்தோடும் கடைபிடிக்கவேண்டும். அதை நம் இஷடம்போல கடைபிடிக்கக்



காமல் பயபக்தியோடும் ஆண்டவர் என்ன கேட்கிறார் என்று மட்டும் ஆராய்ந்து நடக்கவேண்டும். அப்படி நம் இஷடம்போல செய்தால் இரட்சிப்பை இழுந்துபோவோம். அப்போது ஆண்டவரை நோக்கி நான் உமக்காக இதை செய்தேனே! அதை செய்தேனே! என்று சொன்னாலும் அவர் உங்களை அறியேன் என்று திட்டவட்டமாக கூறிவிடுவார். ஆகவே தேவனுடைய கட்டளைக்கு விரோதமாக நடவாமல், நம் இஷடம் போல நடவாமல் இருந்து அவரிடம் எப்படி நடக்கவேண்டுமோ அப்படி நடக்கவேண்டும். அவர் கட்டளைகளில் கண்டிப்பான தேவன். ஒன்றிலும் தவறக்கூடாது என்பதே அவர் திட்டம். ஆகவே ஜாக்கிரதையாக வழிதப்பாமல் நடப்போமாக —ஆமென்.

